வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
எஸ்.டி.சி.எண்.78/2023
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2023

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ஆண்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 12.7.2022 அன்று தேனி மதுவிலக்கு பிரிவு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 14.00 மணிக்கு ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின் படி வெளி அலுவலில் இருந்த காவல் ஆய்வாளரிடம் தொலைபேசி அனுமதி பெற்று நான் மற்றும் தலைமைக் காவலர் 1626 நாகராஜ் , 1645 சக்திவேல், சிஐயு தலைமைக் காவலர் 1647 திரு. கோபால் மற்றும் ரகசிய தகவலாளி தகுந்த உபகரணங்களுடன் நிலையம் விட்டு புறப்பட்டு சென்று அல்லிநகரம் பாண்டி கோவில் வந்து தனித்தனியாக கண்காணித்துக் கொண்டிருக்கும்போது தகவலாளி சொன்ன நபர் கிழக்கில் இருந்து மேற்கு பக்கமாக கையில் பிளாஸ்டிக் பையுடன் வந்தவரை தகவலாளி அடையாளம் காட்டி எங்கள் குழுவினருடன் சுற்றி வழைத்து எங்களது அடையாக அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டு அவரிடம் பெயர் மற்றும் விலாசம் கேட்ட அவர் சின்னமனூரை சேர்ந்த காளியப்பன் மகன் குணசேகரன், மேகமலை என்றும் தற்சமயம் அல்லிநகரம் குறிஞ்சி நகரில் குடியிருப்பதாகவும் கூறினார். மேற்படி நபரை சோதனை செய்ய அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால், என்னுடன் பணிக்க வந்த தலைமைக் காவலர் 1426 மற்றும் 1645 ஆகியோர்களை சாட்சியாக நியமித்து மேற்படி குணசேகரனிடம் தடை செய்யப்பட்ட போதைப்பொருள் கொண்டுவருவதாக நம்பகமான தகவல் வந்தது என்று கூறி உங்களை சோதனை செய்வதற்கு நீதித்துறை நடுவர் மற்றும் அரசிதழ் சான்று பெற்ற அதிகாரியிடம் சோதனை செய்வதற்கு கொண்டு செல்ல உங்களுக்கு உரிமை உள்ளது என்று அவரிடம் எடுத்துக்கூற அவர் எனக்கு வேறு எங்கும் வருவதற்கு விருப்பம் இல்லை என்றும், சார்பு ஆய்வாளரனா தாங்களே சோதனை செய்ய அனுமதிக்கிறேன் என்றும் கூறியதை சோதனை சம்மத கடிதமாக தயார் செய்து அதில் நானும், எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அவர் கொண்டு வந்த பிளாஸ்டிக் பையை பிரித்துபார்க்க அது கஞ்சா இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற எலக்ட்ரானிக் தராசில் எடை போட்டு பார்த்ததில் 100 கிராம் கஞ்சா இருந்தது. மறுபடியும் அவரை பரிசோதித்து பார்த்ததில் ரூ.130 இருந்தது. மேற்படி 100 கிராம் கஞ்சா மற்றும் பணத்தையும் அத்தாட்சியின் பெயரில் கைப்பற்றி எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று எதிரிக்கு நகல் ஒன்றை வழங்கினேன். மேற்படி தடை செய்யப்ப்பட்ட போதைப்பொருள் கொண்டுவந்ததை

எடுத்துக்கூறி எதிரியை கைது குறிப்பாணை தயார் செய்து எதிரியை கைது செய்தேன். கஞ்சாவின் மதிப்பு ரூ.2000/- இருக்கும். கைது செய்த விபரத்தை குணசேகரனின் தாயார் குருவம்மாள் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். கஞ்சா வாங்கிய விபரத்தைப்பற்றி கேட்க அல்லிநகரம் பாண்டி கோவில் கரட்டு பகுதியில் அடையாளம் தெரியாத நபரிடம் வாங்கியதாக கூறினார். மற்றும் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் கஞ்சாவுடன் சார்பு ஆய்வாளர் அவர்களிடம் தனியறிக்கை கொடுத்து ஒப்படைத்தேன். தனியறிக்கை அசாஆ1. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள சார்பு ஆய்வாளரின் கையெழுத்து என்னுடையதுதான். அத்தாட்சி அசா.ஆ.2.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.